# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

25.08.2020 திங்கட்கிழமை




# இலங்கையில் தலையிடுவதற்கு இந்தியாவுக்கு உரிமையில்லை

## எச்சரிக்கின்றார் எல்லாவல தேரர்

கொழும்பு, ஓகஸ்ட் 25

இலங்கையின் உள்வீட்டு விவகாரங்களில் தலையிடும் உரிமை இந்தியாவுக்கு கிடையாது. எனவே, 13 தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பை இந்தியத் தூதுவர் உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

2

## புதினம் தெரியுமோ?

புலமைப்பரிசில், சாதாரண தரப் பரீட்சைகளில் சாதித்த மாணவர்கள ஊடகங்களுக்கு கருத்துச் சொல்லும்போது, நான் மருத்துவராகி மக்களுக்கு சேவை செய்வேன் என்று தன் எதிர்காலக் கனவைச் சொல்வது வழக்கம். ஆனால் மருத்துவத் தொழில் அப்படி மக்கள் சேவையை மட்டும் முன்னிறுத்திய காலமெல்லாம் மலை யேறிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். இப்போதெல்லாம் மருத்துவத்தை சேவை நோக்கோடு செய்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அந்தளவுக்கு பணம் செய்யும் தொழிலாக மருத்துவத்துறை மாறிக்கொண்டு வருகின்றது. இங்கு

2

## கோடாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 25

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் காங்கேசன்துறை சிறப்புக் குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்

2

## மாகாணத் தேர்தலில் அரசியல் வாரிசுகள்

### மண்கவ்வியவர்களும் போட்டி

கொழும்பு, ஓக. 25

2021ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மற்றும் அரசியல் வாரிசுகளும் போட்டியிடவுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்

2

## அரசமைப்புக்கு ஆதரவு தருக!!

### ஆளும், எதிரணி எம்.பிக்களுக்கு பிரதமர் மஹிந்த அறைகூவல்

கொழும்பு, ஓக. 25

'நாட்டுக்குத் தேவையான புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, மக்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக, தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒதுக்கிவைத்து விட்டு கட்சிபேத

2

## துப்பாக்கி ரவைகள் மீட்பு

கம்பஹா, ஓக.25

கம்பஹாமொரகொடைப் பகுதியில் தன்னியக்க துப்பாக்கிக்கான 500 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்வுத் திணைக்கள மும் பொலிஸாரும் இணைந்து முன்னெ

8

## 35 இராஜாங்க அமைச்சுகளின் புதிய செயலர்கள் விவரம்!

கொழும்பு, ஓக. 25

35 இராஜாங்க அமைச்சுகளின் புதிய செயலர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியபோதிலும் அதன் வர்த்தமானி அறிவித்தல் நேற்றையதினமே விடுக்கப்பட்டது. குறித்த வர்த்தமானிக்கு அமைய நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலராக ஆர்.எம்.ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம், சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரசாங்க வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்

2



## வடக்குப் பாதையில் தடம்புரண்டது ரயில் சேவைகள் பாதிப்பு!!

கொழும்பு, ஓக. 25

வடக்கு ரயில் மார்க்கத்தில் ரயில் ஒன்று தடம்புரண்டமையினால் போக்குவரத்து

8



## யாழ். - கொழும்பு குளிரூட்டி ரயில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான குளிரூட்டிய ரயில் சேவையை மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 29ஆம், 30ஆம், 31ஆம் மற்றும்

2

## மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 25

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி இரணைமடு விவசாய சம்மேளனத்தால் இன்று போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் பேரணி கிளிநொச்சி மாவட்டச்

2



## கோடாவுடன்...

பட்டுள்ளார். காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவே இவரைக் கைது செய்தி ருந்தது. கைது செய்யப் பட்ட நபரின் வீட்டில் இருந்து 95 லீற்றர் கோடா கைப்பற்றப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர் மேலதிக சட்ட நடவ டிக்கைகளுக்காக அச்சு வேலி பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (ம)

# இலங்கையில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இந்திய தூதுவருக்குமிடையில் நடை பெற்றுள்ள சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண் டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:
'எமது நாட்டு பிரச்சினைகளில் கருத்துத் தெரிவிப்பதற்கு இந்தியத் தூதுவருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் இந்தியாவின் உள்ளக விடயங்களில் தலையிட்டதில்லை. எனவே, இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடை யில் இருக்கும் உறவுகளைப் பலப்படுத்து வதே அவரின் பணியாக இருக்கவேண் டும் என்பதை கூறிவைக்க விரும்பு கின்றோம்.
அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 தொடர்பில் கதைப்ப தற்கு வாய்ப்புக் கேட்டிருந்தால் அதனை இந்தியத் தூதுவர் நிராகரித்திருக்க வேண்டும். அதேபோல் உள்நாட்டு பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவு டன் கதைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எவரும் அதிகாரம் வழங்கவில்லை. எனவே, பிரிவினைவாத ஏமாற்று அரசியலை இனியாவது கூட்டமைப்பு கைவிடவேண்டும். தமிழர்களின் விடுதலைக்காக போராடு கின்றோம் என மார்தட்டும் தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக எத னையும் செய்யவில்லை. எனவே, அ சாங்கத்துடன் இணைந்து மக்களுக்கான பணியை முன்னெடுக்குமாறு நினைவூட்ட விரும்புகின்றோம்' என்றார். (ம-44)

## புதினம் தெரியுமோ?

மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் இதுதான் நிலை. 'பில்டப்பை' நிறுத்திவிட்டு 'மேட்டருக்குள்' நுழைவோம்.
கொரோனா பரவத் தொடங்கிய போது முழு நாடுமே அல்லோகல்லோ லப்பட்டு, நாடு முழுதும் முடக்கப் பட்டிருந்தது.
எந்த ரூபத்தில், யார் மூலம் கொரோனா வரும் என்று வெருக்குமே தெரியாது. வீடுகளுக்குள் இருப்பதே பாதுகாப்பானது என்று ஊடகங்குச் சட்டமும் போடப்பட்டு மக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைக்கப் பட்டது. இந்தச் சமயத்தில் மருத்துவமனைகளுக்குப் போனால், அங்கு கொரோனாவை விலை கொடுத்து வாங்கவேண்டி வந்துவிடுமோ என்ற பயத்தில் பலர் அங்கு செல்வதை வெகுவாகக் குறைத்தனர். நோய் ஏதும் கட்டுக்கடங்காமல் ஆபத்தான நிலையை அடைந்தால் மட்டுமே மருத்துவமனைப் பக்கம் நோயாளிகள் எட்டிப் பார்த்தனர். அதேபோன்று இயன்றவரை நோயாளிகளை வீடுகளில் இருக்கு மாறும் அவர்களுக்குத் தேவையான மருந்துகளை வீடுகளுக்கே அனுப்பி வைப்பதாகவும் அரசாங்கம் அறிவித்தது. இதனாலும் மருத்துவ மனைகளில் வழக்கத்தைவிட விடுதி களில் தங்கியிருக்கும் நோயாளி களின் எண்ணிக்கையும், கிளினிக்கு களுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்தே இருந்தது. இந்த நிலையில் கொரோனாக் காலத்தில் வடக்கில் ஒரு மருத்துவர் 'ஓவர் ரைம்' கொடுப்பனவாக மட்டும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெற்றிருக்கிறாராம். இத்தனைக்கும் கொரோனா தொடர்பான சிகிச்சையளிப்பில் கூட இவர் பங்குபெறவில்லை. அப்படி இருந்தும், நோயாளர் எண்ணிக்கை வழக்கத்தை விட பெரியளவில் வீழ்ச்சியடைந்த காலத்தில் 'ஓவர் ரைம்' கொடுப்பனவாக இப்படி லட்சக்கணக்கில் எப்படி மருத்துவர் பெற்றிருக்க முடியும் என்பதுதான் இப்போது பலருக்குமுள்ள கேள்வி. 'மெடிக்கல் மிராக்கில், மெடிக்கல் மிராக்கில்' என்பார்களே அது இதுதானோ?? – பட்சி

# மாகாணத் தேர்தலில்...

றது. பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக்கட்சி உட்பட மேலும் சில கட்சிகளின் சார்பிலேயே வாரிசுகள் களமிறங்குகின்றனர் எனவும் தற்போதிருந்தே அவர்கள் தேர்தலுக்கு தயாராகிவருகின்றனர் எனவும் தெரியவரு கின்றது.
மஹிந்த அணியில் போட்டியிட்டு ஊவா மாகா ணசபைக்கு தெரிவாகியிருந்த முன்னாள் அமைச் சர் விஜித் விஜயமுனி சொய்சாவின் மகன் இம் முறை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஊவா வில் போட்டியிடவுள்ளார்.
அமரர் சந்திரசேகரனின் மகள் அனுசா சந்திரசேக ரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். இராஜரட்னத்தின் மகன் ஜனா ஆகியோர் மத்திய மாகாணத்தில் போட்டியிடவுள்ளனர். அதே போல் அரசியல் பிரமுகர்களின் உறவினர்களும் போட்டியிடுகின்றனர். அதேவேளை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முக்கிய அரசியல் பிரமுகர்களும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். (ம-44)

# அரசமைப்புக்கு...

மின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச அழைப்புவிடுத்துள்ளார்.
9ஆவது நாடாளுமன்றத்துக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான செயலமர்வு இன்று நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெற்றது. நாளையும் செயலமர்வு இடம்பெற வுள்ளது. ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே பிரதம அமைச்சர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'பிளவுபட்டிருந்த நாட்டை ஐக்கியப்படுத்துமாறு 2005ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். அதனை ஏற்று நாட்டை ஐக்கியப்படுத்தினோம். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். அன்றுபோல இம்முறை மற்றுமொரு பெரும் பொறுப்பை மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்.
நாட்டில் தற்போதுள்ள அரசியலமைப்பில் மாற்றம் வேண்டும். நாட்டுக்கு தேவையான விதத்தில் புதியதொரு அரசமைப்பு அவசியம் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் பொறுப்பை நாம் ஏற்க வேண்டும். 1977ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசமைப்பே தற்போது நடைமுறையில் உள்ளது.
காலத்துக்கேற்ற வகையில் அது மாற்றப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. அரசமைப்பு என்பது ஒருதரப்புக்குச் சொந்தமானது அல்ல. அது அனைவருக்கும் பொது வானது. அரசமைப்பிலுள்ள ஒவ்வொரு சரத்துகளும் எமது வாழ்க்கை யில் தாக்கம் செலுத்தக்கூடியவை. எனவேதான் மக்கள் கோரும் அரசமைப்பை இயற்றுவதற்காக கட்சி பேதங்களை மறந்து செயற் படவேண்டியது எமது பொறுப்பாக உள்ளது' என்றார். (ம-44)

# 35 இராஜாங்க...

சின் செயலாளராக டபுள்யூ.எம்.என்.பி.ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார்.
தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் செயலாளராக எச்.டி.கொடிகார, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக ரஞ்சித் அபேசிறி ஆகி யோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்ட மைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலா ராக டி.பி.ஜி.குமாரசிறி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பி.சி.கருணா ரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

# யாழ். - கொழும்பு...

முதலாம் திகதிகளில் பரீட்சார்த்தமாக இந்த ரயில் சேவையில் ஈடுபடவுள்ளது.
இதில் பயணிப்போர் ஆசனங்களை முன்பதிவு செய்து கொள்ள முடியும் என ரயில் திணைக்களம் அறிவித்துள் ளது. இந்த ரயில் கல்கிசையில் இருந்து அதிகாலை 5.10 மணிக்கும் காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.15 மணிக்கும் சேவையில் ஈடுபடும் என்பது குறிப்பிடத்தக் கது. (ம)

### நெடுந்தீவுப் பெண் கொலை

# சந்தேகநபரை மன். நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள்

மன்னாரில் கொலை செய்யப்பட்ட நெடுந் தீவுப் பெண்ணின் தாய்மாமன் மன்னார் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளார்.
அதற்கான அனைத்து நடவடிக்கைகளை யும் மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 13ஆம் திகதி மன்னார் உப்பளத்தில் வைத்து இளம்பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும், கொலை செய்யப்பட்ட நபர் யாழ்ப்பா ணம் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்தது. பொலிஸா ரின் தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையில் கடந்த வாரம் இரண்டு பெண்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கொலையின் பிரதான சந்தேக நபராக பெண்ணின் தாய்மாமன் அடையாளப் படுத்தப்பட்டார். அவர் வவுனியா செட்டிக் குளம் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட் டவர் வவுனியா பொலிஸாரின் விசாரணை களின் பின்னர் மன்னார் - வவுனியாப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதி மன்றத் தில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-213)

# மணல் அகழ்வுக்கு...

செயலகம் வரை சென்று மாவட்டச் செயலருக்கு மனுவொன்றும் கைய ளிக்கப்பட்டது.
இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் மிக மோசமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. செருக்கன் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்தின் பணிகளை நிறுத்தி செய்கை நிலங்களை பாதுகாத்துத் தருமாறும் குறித்த போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரி வித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான எம்.சிவமோகன் தெரிவித்ததாவது:
இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் மிக மோசமான முறையில் மண்ணகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறித்த மண்ணகழ்வைத் தடுக்காதுவிடின் இரணைமடு குளத்துக்கு பெரும் ஆபத்துக் காணப்படுகின்றது. அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ம-214,6)

# அதே 'சிம்'; அதே 'எண்' வலையமைப்பை மாற்றலாம்

## வாடிக்கையாளர்களுக்கு புதிய வசதிகள்

கொழும்பு, ஓக.25

பாவனையாளர்கள் உபயோகிக்கும் தொலைபேசி இலக்கங்களை மாற்றாமலேயே, விரும்பிய தொலைபேசி வலையமைப்பை மாற்றிக்கொள்ளும் புதிய நடைமுறை தொடர்பில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு விவாதித்து வருகின்றது. இதனடிப்படையில், சிம் கார்ட்டை மாற்றாமலேயே, நுகர்வோர் தங்களுக்கு விருப்பமான வலையமைப்பை தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அனைத்து வலையமைப்புகளுக்கான கட்டணத்தையும் சம அளவாகப் பேணுவது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது. கையடக்கத் தொலைபேசி, மற்றும் நிலையான தொலைபேசி இணைப்புக்கள் இரண்டிற்கும் இந்த வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக வலையமைப்பு நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படுகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களும் அடுத்த வாரத்திற்குள் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்று தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த வசதி பல வெளிநாடுகளில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் பாவனையை கண்டறிய மதுசாரக் கீற்றுகள்

கொழும்பு, ஓக.25

சிறைக் கைதிகள் போதைப்பொருள்களைப் பயன்படுத்துவதைக் கண்டுபிடிக்கும் வகையில் மதுசாரக் கீற்றுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என சிறைத்துறை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் இது தொடர்பில் கருத்துரைத்த அவர், சிறைச்சாலைகளுக்குள் மதுப்பொருள்கள் கொண்டு வரப்படுகின்றமை ஏற்கனவே தடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இடைக்கிடையே சிறைக் கைதிகள் மத்தியில் மதுசாரக் கீற்றுகளைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்போது மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டால் அது எவ்வாறு சிறைச்சாலைக்குள் கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)



## பழுதடைந்த 5000 கிலோ மீன்கள்: ஏற்றிச்சென்ற லொறி மடக்கிப்பிடிப்பு

புத்தளம், ஓக.25

பழுதடைந்த நிலையில் உள்ள சுமார் 5000 கிலோ கிராம் மீன்களை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றை புத்தளம் சுகாதார பரிசோதகர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று மாலை கொழும்பிலிருந்து புத்தளம் நகரினூடாக அனுமதிப்பத்திரமின்றி இந்த மீன்கள் மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டபோது குறித்த லொறி புத்தளம் பொதுச் சுகாதார ஊழியர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

இந்த லொறி புத்தளம் நகரினூடாகச் சென்றபோது துர்நாற்றம் வீசியதன் காரணமாக லொறி மடக்கிப்பிடிக்கப்பட்டு சோதனைகளை முன்னெடுத்த வேளையில் மனித பாவனைக்கு உகந்ததல்லாத சுமார் 5000 கிலோகிராம் நிறையுடைய மீன்கள் காணப்பட்டன.

இம் மீன்கள் 3 நாள்களுக்கு முன்னரே பழுதடைந்திருக்கலாம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பழுதடைந்த மீன்களைக் கொண்டு சென்ற நபரின் விருப்பத்திற்கு இணங்க அனைத்து மீன்களும் புத்தளம் நகரசபை, குப்பைமேட்டில் வைத்து அகற்றப்பட்டன எனவும், சந்தேகநபரின் விருப்பத்துக்கிணங்க மீன்கள் அகற்றப்பட்டமையால் அவர் கைது செய்யப்படவில்லை எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர் என சுரேஷ் தெரிவித்துள்ளார். (ரி3)

## 296 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் தொற்று பரவலினால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் தென்கொரியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் சிக்கியிருந்த 296 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

தென்கொரியாவிலிருந்து 275 இலங்கையர்களும், கட்டாரிலிருந்து 21 இலங்கையர்களும் இவ்வாறு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன் அவர்களை தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ரி2)

## 2600 புதிய சுற்றுலாத்தளங்கள் விரைவில் அபிவிருத்தி

கொழும்பு, ஓக.25

இலங்கையில் சுற்றுலாத்துறைக்காக இது வரையில் பயன்படுத்தப்படாத மற்றும் சுற்றுலா ஈர்ப்பைப் பெறக்கூடிய 2600 இடங்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். மேலும், கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறந்து சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வரும் சந்தர்ப்பத்தில் இந்த 2600 இடங்களும் சுற்றுலாப் பயணிகளுக்காக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக ஒரே நேரத்தில் அதிக சுற்றுலா பயணிகளை அழைத்து வரக்கூடிய வகையில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் நாள்களில் இலங்கையில் உள்ள ஏனைய விமான நிலையங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

## 110 இலங்கையர்கள் இந்தியாவிலிருந்து தாயகம் வருகை

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் இந்தியாவில் சிக்கியிருந்த மேலும் 110 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

புதுடில்லியில் இருந்து நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.40 மணியளவில் இவர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்தவர்கள் பி.சி.ஆர் பிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## அரச காணிகளைப் பராமரித்தோருக்கு காணி அனுமதிப்பத்திரம்

மட்டக்களப்பு, ஓக.25

நீண்ட காலமாக அரச காணிகளைப் பராமரித்து வந்த மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேசத்தில் அரச காணிகளை பராமரித்து வந்த மக்களுக்கு முதல் கட்டமாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு செயலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூறு பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

எதிர்வரும் வாரங்களில் ஏனைய காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கிவைக்கப்படவுள்ளன. இந்தக் காணிகளை தங்களின் தேவைக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். அதனைப் பயன்படுத்த முடியாத பட்சத்தில் அரசாங்கத்திடம் ஒப்படைக்க முடியுமே தவிர காணியை இன்னொருவருக்கு கைமாற்றம் செய்யமுடியாது என்று ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தெரிவித்துள்ளார். (ரி2-150)

# கொரோனா ஆபத்து நீங்கவில்லை

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் ஆபத்து நீங்கி விட்டது எனக் கருத வேண்டாம் என நாட்டு மக்களுக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிகை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று சமூகப் பரவலாக மாறாத போதிலும் கொரோனா ஆபத்து நீங்கி விட்டது எனக் கருதக்கூடாது.



ஆபத்து முற்றாக நீங்கிவிட்டது எனக் கருதி மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் முன்னெச்சரிக்கையைத் தளர்த்தக் கூடாது. இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களே.

வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்களில் சிலர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்ற போதிலும், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களைத் தொடர்ந்து அழைத்து வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில், பொதுமக்கள் ஆபத்து நீங்கிவிட்டது எனக் கருதாது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் கொலை

கொழும்பு, ஓக.25

கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் பேரகஸ்ஹந்தியமல்வத்த பகுதியில் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பெண் வீட்டிலிருந்த போதே இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் 39 வயதுடையவர் என்பதோடு, 11 வயது சிறுமி ஒருவரின் தாயாருமாவார்.

சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் மற்றும் மற்றொரு நபரையும் கைதுசெய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)



# தம்புள்ள மாநகர சபை முதல்வர் மட்டு. மாநகர சபைக்கு விஜயம்

மட்டக்களப்பு, ஓக.25

தம்புள்ள மாநகர சபையின் முதல்வர் ஜலிய ஒபெத மற்றும் தம்புள்ள மாநகர சபையின் பிரதி முதல்வர் உள்ளிட்ட குழுவினர் மட்டக்களப்பு மாநகர சபைக்கு சினேகபூர்வ விஜயமொன்றினை நேற்று திங்கட்கிழமை மேற்கொண்டனர்.

இவ் விஜயத்தின்போது நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மட்டக்களப்பு மாநகர சபையின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் மாநகர முதல்வர்கள் சம்மேளனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் கொண்டு செல்வதோடு மாநகர சபைகளுக்கும் அதனோடு இணைந்து செயற்படும் அரச நிறுவனங்களுக்கும் இடையேயான உறவுகளைப் பலப்படுத்தி பேண்தகு அபிவிருத்திகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேற்படி சந்திப்பில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரி3)





அமரர் பெரியதம்பி செல்வவிநாயகமூர்த்தி நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது குடும்பத்தினரின் நிதி உதவியில், முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் கைகழுவும் பொறித்தொகுதிகளும் தொற்றுநீக்கி திரவங்களும் வெளிச்சம் நிறுவனத்தின் ஊடாக இன்று வழங்கப்பட்டன. (ரி3-222)

# இலங்கையுடன் உறவு; பலப்படுத்தும் இந்தியா

கொழும்பு, ஓக.25

இலங்கையுடன் மத மற்றும் கலாசார உறவுகளை விருத்தி செய்யவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. கண்டியில் கண்டிய நடனபீடம் ஒன்றை அமைப்பதற்கான வழிநடத்தல் குழுக்கூட்டம் கடந்த வார இறுதியில் நடைபெற்ற போதே இந்தியா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டமானது இந்தியாவுக்கான உதவி உயர்ஸ்தானிகர் வினோட் கே ஜேக்கப் மற்றும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் கபில குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பீடத்தை அமைப்பதற்காக 145 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கட்டடம், தளபாடங்கள், பலநோக்கு மண்டபம் மற்றும் கருவிகள் என்பன இந்தியாவினால் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இந்தியா இலங்கையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் இதுவரை 92 பில்லி யன் ரூபா பெறுமதியான திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகரம் அறிவித்துள்ளது. (ரி2)

# சிறைகளில் போதைச்சோதனை: மூன்று கைதிகள் தற்கொலை

கொழும்பு, ஓக.25

சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள்களைக் கண்டறியும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அடுத்து, போதைப்பொருளுக்கு அடிமையான மூன்று கைதிகள் தற்கொலை செய்துள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் துசார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த வாரப்பகுதியில் இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதேவேளை வெலிக்கடை, மெகசின் சிறைச்சாலை மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை ஆகியவற்றுக்கு சிறப்பு அதிரடிப்படையினரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி சிறைச்சாலைகளுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். சிறைச்சாலைகளுக்குள் போதைப் பொருள் தொடர்பில் தொடர்ந்தும் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

# போதைப்பொருள் கடத்திய கில்லாடிப் பெண் கைது

கொழும்பு, ஓக.25

போதைப்பொருள் கடத்தல் மூலம் பணம் ஈட்டியமை தொடர்பில், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஜனித் மதுஷங்க டி சில்வாவின் தாயார் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல்மாகாணம் வடக்குப் பிரிவில் கொட்டாவை மாயா மாவத்தைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிமிருந்து 51,000 ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 5 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ரி2)

# இலங்கைக்கு தொடர்ந்தும் உதவுவதற்குத் தயார்

## சீனா உறுதியளிப்பு

கொழும்பு, ஓக.25

இலங்கையின் பொருளாதார மீட்சிக்குத் தொடர்ந்தும் உதவுவதற்குத் தயாராக இருப்பதாக சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான சீனத்தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஹுவே நேற்று திங்கட்கிழமை நிதி மற்றும் மூலதனச்சந்தை விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இச்சந்திப்பு குறித்து சீனத்தூதரகம் அதன் டுவிட்டர் பக்கத்தில் பதியப்பட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இச்சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்த அதேவேளை, இதன்போது பல்வேறு விடங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகவும் சீனத்தூதரகம் தெரிவித்திருக்கிறது.

அத்தோடு இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதேவேளை சீனா இலங்கையில் குறிப்பாக நெடுஞ்சாலை நிர்மாணம், துறைமுகம், விமானநிலையம் போன்ற முக்கிய அபிவிருத்தித் திட்டங்க ளில் முதலீடுகளைச் செய்திருக்கிறது. இவ்வாறு சீனாவினால் முதலீடு செய்யப்பட்டிருக்கும் சில திட்டங்களில் போதிய வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படாமை குறித்து அண்மைக்காலங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு சீனாவின் முதலீடுகள் இலங்கையைப் பாரிய கடன் பொறிக்குள் தள்ளுவதாக அமையும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)





## பண்டார வன்னியனின் வெற்றிநாள் நினைவு அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஓக.25

பண்டார வன்னியனின் வெற்றிநாள் நினைவுதினம் இன்று யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள அவரின் உருவச்சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது. .

தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் உருவச்சிலைக்கு முன்பாக மன்னனின் உருவப்படம் வைக்கப்பட்டு, அதற்கும் உருவச்சிலைக்கும் மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ரி1-20)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு விருத்திக்கு திட்டம் வகுப்பு

கொழும்பு, ஓக.25

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டுக்காக 5 வருட காலத் திட்டமொன்றை வகுக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை தயாரித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினால் தற்காலிக பின்னடைவைச் சந்தித்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையை அடுத்த வருட ஆரம்பத்துக்குள் மீளக் கட்டியெழுப்ப எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். மேலும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிப்பு வழங்கும் நிறுவனமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை மாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ரி2)



### படுகொலை செய்யப்பட்ட

## நெடுந்தீவு பெண்ணின் சடலம் நேற்று அடக்கம்

மன்னார், ஓக.25

மன்னார் உப்பளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 13 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜுடியின் (வயது 21) என்ற இளம் பெண்ணின் சடலம் மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் உதவியுடன் நேற்று திங்கட்கிழமை மாலை 4.45 மணியளவில் மன்னார் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் பெரிய தாய் மற்றும் குடும்ப உறவினர்களிடம் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது. சடலத்தை சொந்த இடத்திற்கு கொண்டு சென்று அடக்கம் செய்ய முடியாத நிலையில் குடும்ப உறவுகள் தவித்த நிலையில், குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்ட கடந்த 13 ஆம் திகதி முதல் அவரின் மரணம் தொடர்பாகவும், மரணத்திற்காக நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் செயற்பட்ட மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவியுடன் குறித்த சடலம் நேற்று திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மாயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

மரணம் தொடர்பாக கைதான இளம் பெண்ணின் சகோதரி, அவரது பெரிய தாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

### பத்து இலட்சம் ரூபா மோசடி:

## முன்னாள் காதலன் மீது காதலி முறைப்பாடு

மொனராகலை, ஓக.25

தனது முன்னாள் காதலன் தன்னிடம் பத்து இலட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்துள்ளார் எனக் கூறி பெண் ஒருவர் மொனராகலை பொலிஸாரிடம் முறைப்பாடொன்றினைப் பதிவுசெய்துள்ளார். அந்த முறைப்பாட்டுப் பதிவில் தெரிவித்துள்ளதாவது,

எனது முன்னாள் காதலன் கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரராக இருந்து வருகின்றார். நாம் இருவரும் பல வருடங்கள் காதலித்து வந்தோம். எனது காதலனுக்கு பணக் கஷ்டம் ஏற்பட்டு என்னிடம் பத்து இலட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றார். குறிப்பிட்ட தினத்தில் கடன் பணம் எனக்கு கிடைக்கவில்லை. பலமுறை இது குறித்துக் கேட்டேன். அதையடுத்து அவர் என்னுடனான உறவை நிறுத்திவிட்டார். அவர் என்னிடம் பெற்ற கடனை மீளப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இம் முறைப்பாட்டை நான் பதிவு செய்கின்றேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் முறைப்பாட்டையடுத்து மொனராகலை பொலிஸார் பெண்ணிடம் கடன் பெற்றவரைக் கைது செய்து விசாரணை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என மொனராகலை குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பாளர் எஸ். ஜி. கே. காலகே தெரிவித்துள்ளார். (ரி3)



## தடுப்பூசித் திட்டத்தில் இணைய விரும்பும் நாடுகளுக்கு அழைப்பு

ஜெனிவா, ஓக.25

உலகளாவிய கொரோனாத் தடுப்பூசி திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்பும் நாடுகள் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் தமது விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் ஜெனரல் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 18க்குள் சேர விரும்பும் நாடுகள் உறுதிப்படுத்தப்பட்டு, ஒக்டோபர் 9 ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டிய ஆரம்பக் தொகையைச் செலுத்த வேண்டுமெனவும், விலைகள் முடிந்தவரை குறைவாக இருப்பது உறுதி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# கொழும்பு மிதக்கும் சந்தை நவம்பரில் மக்கள் பாவனைக்கு



கொழும்பு, ஓக.25

கொழும்பு மிதக்கும் சந்தையைப் புனர்நிர்மாணம் செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் மக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் 312 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2014 ஓகஸ்ட் 25ஆம் திகதி கொழும்பு, மிதக்கும் சந்தைத் தொகுதி நிர்மாணிக் கப்பட்டது. சந்தைத் தொகுதியை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப் படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர். அதையடுத்து முறையாகப் பராமரிக்கப்படாமல் காணப்பட்ட சந்தைத் தொகுதியை மீண்டும் நவீன மயப்படுத்தி எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில் இந்தத் திட்டத்தின் மூலத் திட்டத்துக்கு அமைய, எஞ்சியுள்ள திட்டத்தை மிக விரைவாக பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி1)



# உத்தியோகத்தர்களுக்கு தீயணைப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.25

பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை தீயணைப்புப்0 பயிற்சி யாழ்ப்பாண பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலர் திருமதி.ஆர்.சோபிகா தலைமையில் இடம்பெற்ற இப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு உத்தியோகத்தர் ஆர்.விஜிந்தன் மற்றும் மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர் எல்.ஏ.பிறேம்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இப் பயிற்சி நெறியில் தீயணைப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள், அதற்கான தடுப்பு முறைகள் என்பன பற்றிய விளக்கங்களுடன் கூடிய செயன்முறையும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. (ரி1)





# மரக்குற்றிகள் கடத்தல்; இருவர் கைது

மட்டக்களப்பு, ஓக.25

சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட மரக் குற்றிகளை கடத்திய இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை வட்டார வனத் திணைக்களத்துக்கு உட்பட்ட குடும்பிமலை பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் வெட்டப்பட்டு வியாபாரத்துக்கான துண்டுகளாக அறுவை செய்யப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர், வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டக்களப்பு இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான அறுவை செய்யப்பட்ட மரங்கள் மற்றும் மரங்கள் ஏற்றுவதற்கு பயன்படுத்திய உழவு இயந்திரம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2-150)

# கப்பல் தயாரிப்பு பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.25

கொழும்பு டொக் யாட் நிறுவனம் நோர்வேயிலுள்ள மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனத்துக்காக ஆறு பொருள்கள் போக்குவரத்து கப்பல்கள் உட்பட 10 கப்பல்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இந்தச் செயற்றிட்டத்திற்கான உடன்படிக்கை கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் குறிப்பிட்ட உரிமை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது. மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனம் கரே மஸ் அன்ட் கம்பனி நிறுவனத்தின் உப நிறுவனமாகும் என்பதுடன் அதன் தாய் நிறுவனம் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பலவற்றின் பங்கு நிறுவனமாகும்.

கொழும்பு டொக்கியாட் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படவுள்ள இக் கப்பல்களில், போக்குவரத்துக் கப்பல் 89.5 மீற்றர் நீளத்தையும் 5000 தொன் பொருட்களைக் கொண்டுசெல்லக்கூடிய வகையிலும் தயாரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கிணங்க கொழும்பு டொக்கியாட் நிறுவனம் 18 மாத காலத்திற்குள் முதலாவது கப்பலை தயாரித்து வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. இதேவேளை ஏனைய கப்பல்களை எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ரி1)

# மாணவனைத் தாக்கிய அதிபர் சரீரப் பிணையில் விடுதலை

ஹற்றன், ஓக.25

மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஹற்றன் மலைமகள் தமிழ் வித்தியாலய அதிபர் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையில் தரம் 11 ல் கல்வி பயிலும் ஜெயபிரகாஸ் என்ற மாணவனை கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் சப்பாத்துக் காலால் எத்தி தலைப் பகுதியினை சுவரில் தாக்கியுள்ளார். தாக்குதலுக்குள்ளான மாணவன் வட்டவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றபட்டு நேற்று வீடுதிரும்பியுள்ளான். சம்பவம் தொடர்பில் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைபாட்டுக்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட அதிபர் கைதுசெய்யப்பட்டு ஹற்றன் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என வட்டவலை பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து அவருக்கு எதிராக இன்று பாடசாலைக்கு முன்பாக பெற்றோர்கள் திரண்டு ஆர்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். இந்த மாணவனுக்கு ஏற்பட்ட நிலை இனி எந்த ஒரு மாணவனுக்கும் வரக்கூடாது என வலியுறுத்தியும் குறித்த அதிபர் பாடசாலைக்கு வரக்கூடாது என வலியுறுத்தியும் பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவனைத் தாக்கிய அதிபருக்கு எதிராக கல்வி அமைச்சு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ரி1)



## மும்பையில்

# இடிந்து வீழ்ந்தது அடுக்குமாடிக் குடியிருப்பு: ஆறு பலி: 78 இற்கும் மேற்பட்டோர் மீட்பு

புதுடில்லி, ஓக.25

மும்பை அருகே அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 78 பேர் இன்று மாலை வரை மீட்கப்பட் டுள்ளனர்.

மராட்டிய மாநிலம் தலைநகர் மும்பை அருகே உள்ள மகாட், காஜல்புரா பகுதியில் 45 வீடுகளுடன் இருந்த 5 மாடி குடியிருப்பு கட்டடம் நேற்று மாலை அளவில் மேலிருந்து திடீரென இடிந்து விழ ஆரம்பித்துள்ளது. இதனையடுத்துக் கீழ்த் தளத்தில் இருந்த குடியிருப்பு வாசிகள் விரைவாக வீடுகளை விட்டு வெளியே ஓடியுள்ளனர். ஆனால் இக்கட்டிடம் சில நிமிடங்க ளுக்குள் முழுமையாக இடிந்து தரை மட்டமானது எனவும் இடிபாடுகளுக்குள் மக்கள் பலர் அகப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக உள்ளூர் பொலிஸார், மற்றும் தீயணைப்பு துறையினர் அவ்விடத்திற்கு விரைந்து வந்து இடுபாடுகளுக்குள் சிக்கிய 28பேர் மீட்டனர்.







தொடர்ந்து தேசிய பேரிடர் மீட்புப் படையின் 3 குழுக்கள் மீட்புப் பணியில் முடுக்கி விடப்பட்டன. அதையடுத்து இன்று மாலைவரையில் இடிபாடுகளில் சிக்கியிருந்த 4வயது சிறுவன் உட்பட 78 பேர் மீட்கப்பட்டதுடன் இடிபாடுகளில் சிக்கி அறுவர் உயிரிழந்துள்ளனர். (ரி1)

## வலுக்கும் எதிர்ப்பு...





ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பெலாரஸின் ஜனாதிபதி லூகெஷென் கோவுக்கு எதிராக 15நாள்களைக் கடந்தும் போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன. தொடர்ந்து 6ஆவது முறையாக ஜனாதிபதியாகியுள்ள லூகெஷென்கோ தேர்தலில் முறைகேடு செய்ததால் உடனே பதவி விலக வேண் டும் என்று போராட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

## பிலிப்பைன்ஸ் குண்டுவெடிப்பு; 10 பேர் சாவு



மணிலா, ஓக.25

பிலிப்பைன்ஸில் சுலு மாகாணத்தில் உள்ள ஜோலோ நகரில் நேற்று இடம்பெற்ற இரு வேறு குண்டுவெடிப்புகளில் பத்துப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். நகரின் மத்திய பகுதியில் இராணுவ வாகனத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொறுத்தி வைக்கப்பட்ட உள்ளூர் குண்டு வெடித்துள்ளது. அதில் 6 இராணுவ வீரர்களும் 4 பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அண்மையில் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியை அதிகாரிகள் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் அடுத்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அதில் தற்கொலைக் குண்டுதாரி உயிரிழந்துள்ளதுடன், 17 படையினர் காயமடைந்தனர். (ரி1)

# நவான்லியின் உடலில் விஷம் கலப்பு

## உறுதிப்படுத்தியது பெர்லின் மருத்துவமனை

பெர்லின், ஓக.25

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவான்லியின் உடலில் நச்சுப்பொருள் கலந்துள்ளமையை அவருக்கு சிகிச்சையளிக்கும் ஜெர்மனி வைத்தியசாலை உறுதிப்படுத்தியுள்ளது. அவரின் உடலில் நச்சுப் பொருளேதும் கலக்கவில்லை என இதற்கு முன்னர், நவான்லிக்கு சிகிச்சை வழங்கிய ரஷ்ய வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

ரஷ்ய ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்து வரும் அலெக்ஸி நவான்லி, விமான நிலையத்தில் பருகிய தேநீரில் நச்சு கலந்திருக்கலாம் என நவால்னியின் ஆதரவாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் நவான்லியின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது எனினும் உயிருக்கு



அச்சுறுத்தல் இல்லை என பெர்லின் வைத்தியசாலை தெரிவித்துள்ளது. நச்சுப்பொருளால் அவரின் நரம்புத் தொகுதி பாதிக்கப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலை நிர்வாகம் குறிப்பிட் டுள்ளது. (ரி1)

# கோலி எச்சரிக்கை



புதுடில்லி, ஓக.25

ஒரு தவறு செய்தால் கூட ஒட்டுமொத்த தொடரையும் பாழாக்கிவிடும் என்று கோலி ஆர்.சி.பி வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்காக 8 அணி வீரர்களும் ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ளனர். தற்போது ஒருவார தனிமைப்படுத்துதலில் உள்ளனர். இந்த நேரத்தில் முதன்முறையாக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் கப்டன் விராட் கோலி, அணியின் சக வீரர்களுடன் காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்.

இதன்போதே விராட் கோலி ஒரு தவறு செய்தால் கூட ஒட்டுமொத்த தொடரையும் பாழாக்கிவிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து கோலி கூறுகையில்,

பாதுகாப்பு வளையம் என்பதில் நாம் அனைவரும் ஒரே சிந்தனையுடன் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். எந்த நேரத்திலும் இதை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். இதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால், ஒரு தவறு செய்தால், நம்முடன் உள்ள ஒருவரால் ஒட்டுமொத்த தொடரும் பாழாகிவிடும் என்று நினைக்கிறேன். ஒருவர் கூட இதை விரும்பக்கூடாது - என்றார். (ரி2)





# டோனி ஓய்வு குறித்து முஷ்டாக் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக.25

ஓய்வு விடயத்தில் டோனியை நல்லவிதமாக நடத்தவில்லை என்று இந்திய கிரிக்கெட் சபை மீது சக்லைன் முஷ்டாக் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் டோனியின் திடீர் ஓய்வு குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:

டோனி போன்ற வீரரை இந்திய கிரிக்கெட் சபை சரியான முறையில் நடத்தவில்லை. அவரது ஓய்வு இந்த மாதிரி முடிந்திருக்கக்கூடாது. இதை என்னுடைய உள்ளத்தில் இருந்து சொல்கிறேன்.

நான் நினைப்பதையே அவரது கோடிக்கணக்கான ரசிகர்களும் நினைக்கிறார்கள். நான் இவ்வாறு சொல்வதற்காக இந்திய கிரிக்கெட் சபை மன்னிக்க வேண்டும். ஆனால் கிரிக்கெட் சபை டோனியை நல்லவிதமாக நடத்தவில்லை என்பதே உண்மை. இது எனக்கு வருத்தமளிக்கிறது. இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபை தோல்வி அடைந்துவிட்டது.

இந்திய அணிக்காக கடைசியாக ஒரு சர்வதேச போட்டியில் அவர் விளையாடி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் உயர்ந்த நிலையில் விடைபெறவேண்டும் என்றே விரும்புவார்கள். நிச்சயம் டோனிக்கும் இந்தக் கனவு இருந்திருக்கும். வழியனுப்பும் போட்டி நடத்தப்படாததால் அவரது ரசிகர்களும் வருத்தத்தில் இருப்பார்கள். டோனி கிரிக்கெட்டில் ஒரு மாணிக்கம். உண்மையான ஹீரோ. அவரை நினைத்து பெருமைப்படுகிறேன். அவர் ஐ.பி.எல். போட்டியில் களம் காண இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறதுஎன்றார். (ரி2)

# சம்பியன் வென்றது மணற்காடு அன்ரனீஸ்

கரணவாய் ஒக 25

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இந்த ஆண்டுக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்று நேற்றுமுன்தினம் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்த இறுதி ஆட்டத்தில் மணற்காடு சென் அன்ரனீஸ் விளை யாட்டுக்கழகமும் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. (ரி2-108)

# உசைனுக்கு கொரோனா

புதுடில்லி, ஓக.25

பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்டுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. உடல் நலம் பாதிக்கப்பட்டதையடுத்து உசைன் போல்டு நேற்று கொரோனா பரிசோதனையை மேற்கொண்டார். அதில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியானது. இதனையடுத்து சமூகவலைதளத்தில் கொரோனா தொற்றால் தாம் பாதிக்கப்பட்டுள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மின்னல் வேக வீரராக வலம் வந்த ஜமைக்காவின் உசைன் போல்ட் ஒலிம்பிக்கில் 8 தங்கப்பதக்கங்களையும், உலக தடகளத்தில் 11 தங்கப்பதக்கங்களையும் அறுவடை செய்த மகத்தான சாதனையாளர் ஆவார். 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் அதிவேகமாக ஓடிய உலக சாதனையும் இவரது வசமே உள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் 8 முறை தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 2008, 2012, 2016 என மூன்று ஒலிம்பிக் போட்டிகளிலும் 100 மீ.ஓட்டம், 200 மீ.ஓட்டம் ஆகிய இரண்டிலும் தங்கப் பதக்கங்களை வென்று சாதனைகள் படைத்தவராவர். 2017 உலக சம்பியன்ஷிப் போட்டிக்குப் பிறகு ஓய்வு அறிவிப்பை வெளியிட்டார். (ரி2)



# துப்பாக்கி...

டுத்த சுற்றி வளைப்பு நடவடிக்கை யின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர்.
வீடொன்றின் மலசலகூட குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரவை களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.
இதேவேளை, ஹோக்கந்தர பகுதியில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பில், கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே இந்தத் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி2)

# சினிமாவாகிறது கேரள விமான விபத்து

கேரளாவில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் விமானம் விபத்துக்குள்ளான சம்பவத்தை மையமாக வைத்து திரைப்படம் உருவாக வுள்ளது. துபாயில் இருந்து கேரள மாநிலம் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலைத்துக்கு கடந்த ஓகஸ்ட் 7ஆம் திகதி இரவு ஏர் இந்தியாவின் ஐ.எக்ஸ்.1344 விமானம் வந்தது. அந்த விமானத்தில் 10 குழந்தைகள், 2 விமானிகள், ஐந்து பணிப்பெண்கள் உள்பட மொத்தம் 190 பேர் பயணம் செய்தனர்.

விமானம் கரிப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது ஓடுதளத்தில் இருந்து சறுக்கிக்கொண்டு பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் படு காயமடைந்தனர். இந்நிலையில், இந்த விபத்தை மையமாக வைத்து மலையாளத்தில் 'கேலிகட் எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் ஒரு படம் தயாராகிறது. இதனை மாயா என்பவர் இயக்குகிறார்.



# தடம் புரண்டது ரயில்...

சேவைகள் இன்று பாதிக்கப்பட்டிருந்தன. இன்று காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுச் சென்ற ரயில் ஒன்று தடம் புரண்டதை அடுத்தே இவ்வாறு சேவைகள் பாதிக்கப்பட்டன. கோட்டை மற்றும் மருதானைக்கு இடையிலேயே ரயில் தடம்புரண்டிருந்தது. (ம)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 25.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.